# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2025 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2025.05.26 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# இலங்கை தேசிய புகைப்படக் கலைச் சங்கம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**இலங்கை தேசிய புகைப்படக் கலைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வருண லியனகே அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கள்ளலாம்

**விலை : ரூபா. 24.00**

**தபாற் செலவு : ரூபா. 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்திற்காகவும் கருத்தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத் தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதிலும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழு இலாப நோக்கமற்ற நிறுவனமாக செயற்படுதல்

**3.** கூட்டிணைக்கப்பட்ட குழு இலாப நோக்கமற்றதோர் நிறுவனமாக சங்கத்தினது அதன் உறுப்பினர்களின் தன்மைக் காகவும் மாத்திரமே செயற்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள

**4.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக் கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது:-

(அ) புகைப்படக் கலைக்கான கல்வியை இலங்கையர்களுக்கு இலவசமாக வழங்குதல் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத்தை ஊக்குவித்தல் ;

(ஆ) சர்வதேச புகைப்படக் கலைச் சம்மேளனத்தின் உள்நாட்டு செயற்பாட்டு முகவராக இலங்கை புகைப்படக் கலைஞர்களுக்கு சர்வதேச வெற்றிகளை அடைந்துகொள்ளவும் சர்வதேச தர தகுதியைப் பெற்றுக்கொள்ளவும் வழிகாட்டுதல் மற்றும் விதப்புரைகளைச் செய்தல்; மற்றும்

(இ) பாடாசாலைச் சிறார்களனி புகைப்படக் கலைக் கல்விக்கான பாடவிதானத்தை விதந்துரைத்தல், வளவாலர்களை ஏற்பாடு செய்தல், வருடாந்த பாடசாலை புகைப்படக் கலை பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் கல்வி அமைச்சின் துணைப்பாட விதானத்தில் புகைப்படக் கலையை அறிமுகம் செய்து அதனை நடைமுறைப்படுத்துவதில் பங்களிப் புக்களைச் செய்தல்;

